# தமிழகத்தில் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகளின் நிலவரம் - காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வின் சுருக்க அறிக்கை

## பாதுகாப்பான கருக்கலைப்பு திட்டம் :-

1971ஆம் ஆண்டு இந்தியாவில் கருக்கலைப்பு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி கருக்கலைப்பு செய்துகொள்வதற்கு சட்டப்படி அனுமதிக்கப்படுகிறது. பாதுகாப்பில்லாத கருக்கலைப்பினால் ஏற்படும் மரணங்களைத் தடுப்பதே அச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கருக்கலைப்பு சட்டம் கொண்டுவரப்பட்டு 48 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் இன்றும் பாதுகாப்பான கருக்கலைப்பு என்பது பெண்களுக்கு ஒரு எட்டாக் கனியாகவே உள்ளது. பாதுகாப்பில்லாத கருக்கலைப்பினால் ஏற்படும் ஆரோக்கியப் பிரச்சனைகளினால் ஒவ்வொரு ஆண்டும் நம் நாட்டில் சுமார் 15,000 - 20,000 பெண்கள் இறக்கின்றனர். அதாவது, ஒவ்வொரு நாளும் 50 பெண்களை இழந்து வருகிறோம். இந்தியாவின் கருக்கலைப்பு நிலவரம் குறித்து குட்மாக்கர் நிறுவனம், 2015 ஆம் ஆண்டு ஓர் ஆய்வை நடத்தியது. அதன்படி இந்தியாவில் நிகழும் கருக்கலைப்புகளில், ஆறு சதவிகிதம் மட்டுமே அரசு மருத்துவ மையங்களில் நடக்கிறது. மேலும் மொத்த கருக்கலைப்புகளிள் நான்கிள் ஒன்று மட்டுமே மருத்துவ மையங்களில் நிகழ்கிறது எனவும் அவ்வாய்வு தெரிவிக்கிறது. (குட்மாக்கர் ஆய்வு) பெண்களின் வாழ்க்கையில் நிகழும், இவ் உயிர் சேதத்தைத் தடுப்பதற்கு பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இந்தியாவில், கருக்கலைப்பு சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், பாதுகாப்பில்லாத கருக்கலைப்புகள் ஏன் அதிக அளவில் நடக்கிறது என்பது ஒரு பெரிய கேள்வியாக உள்ளது. இச்சூழ்நிலையில் "பாதுகாப்பான கருக்கலைப்பிற்கான உரிமையை நிலை நாட்டுதல்" என்ற ஒரு திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டு ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அவ்வாய்வில் வெளிவந்த முக்கிய முடிவுகளை இக்கைபிரதியில் பார்ப்போம்.

CommonHealth, constituted in 2006, is a multi-state coalition of organizations and individuals advocating for better sexual and reproductive health, with a specific focus on maternal health and safe abortion.

"பாதுகாப்பான கருக்கலைப்பிற்கான உரிமைகளை நிலைநாட்டுதல்"

என்பது ஆசியாவிலுள்ள சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் துவங்கப்பட்ட ஒரு திட்டமாகும். வங்காளதேசம், இந்தியா, நேபாளம், கம்போடியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய ஐந்து நாடுகளில் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதற்கான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான தகவல்களைச் சேகரிக்கும் பொருட்டு இவ்வைந்து நாடுகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் காமன்ஹெல்த்π[i] (CommonHealth) என்ற கூட்டமைப்பு இவ்வாய்வை மேற்கொண்டது.

இவ்வாய்வின் பொருட்டு ஏற்கனவே உள்ள புள்ளிவிவரங்கள் மற்றும் ஆதாரங்கள் திரட்டப்பட்டன. அதுமட்டுமல்லாமல், காஞ்சிபுரம் மாவட்டத்தின் சில கிராமங்களிலுள்ள முன்னணி சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் சுய உதவிக்குழுத் தலைவிகளிடம் விரிவாக நேர்காணல் நடத்தப்பட்டது. அடுத்ததாக நலிவடைந்த வகுப்புப் பெண்கள் மத்தியில் குழு விவாதங்களும் நடத்தப்பட்டன. மேலும், ஒரு சில தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளைப் பார்வையிட்டு அங்குள்ள வசதிகள் மற்றும் வழங்கப்படும் சேவைகள் குறித்த தகவல்களும் சேகரிக்கப்பட்டது. காமன்ஹெல்த் அமைப்பில் உறுப்பினராக உள்ள ரூரல் விமன்ஸ் சோஷியல் எஜிகேசன் சென்டர் என்ற நிறுவனத்திலுள்ள பயிற்சி பெற்ற ஆராய்ச்சியாளர்கள் இவ்வாய்வை நடத்தினர்

## ஆய்வின் நோக்கம் :-

1. பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் போதிய அளவில் கிடைக்கின்றதா?
2. பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகள் கிடைப்பதில் மற்றும் சேவைகளைப் பெறுவதில் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகள் யாவை?
3. கருக்கலைப்பு குறித்து கிராம அளவில் பணிபுரியும் அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர், கிராமத் தலைவர்கள், பெண்கள் மற்றும் சேவை வழங்குவர்களின் கண்ணோட்டங்கள் என்னவாக இருக்கின்றன?

## தமிழ்நாட்டில் கருக்கலைப்பு சேவைகளின் நிலவரம் :-

தமிழ்நாடு தொழில் துறையில் மிகவும் முன்னேறிய ஒரு மாநிலமாகும், அதுபோலவே சமூக- சுகாதார குறியீடுகளிலும் மாநிலம் நல்ல முன்னேற்றம் கண்டுவந்துள்ளது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழகத்தில் அரசு சுகாதார அமைப்பு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில், போதுமான கருக்கலைப்பு சேவை மையங்கள் உள்ளன. 20,000 மக்கள் தொகைக்கு ஒரு கருக்கலைப்பு மையம் என்ற அளவில் இருக்கின்றன. பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகளை விரிவுப்படுத்தவும், இடைவெளிக்கான கருத்தடை சாதனங்கள் பரவலாக எல்லா சுகாதார மையங்களில் கிடைப்பதை அதிகரிக்கவும் தமிழக அரசு 2011 ஆம் ஆண்டு ஒரு விரிவான கருக்கலைப்பு கொள்கையை உருவாக்கியது. ஆனால் அந்த கொள்கையை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களிலுள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு எம்விஏ (MVA) என்றழைக்கக் கூடிய, கருவை உறிஞ்சி எடுக்கும் முறைக் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. அதுபோலவே, ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனை மற்றும் குறிப்பிட்ட சில தாலுக்கா மருத்துவமனைகளில் (CEmONC மையங்களில்) மாத்திரைகள் மூலம் கருக்கலைப்பு சேவை வழங்குவதற்குத் தேவையான மருந்துகள் வாங்குவதற்கு என 2017-2018 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2015 ஆம் ஆண்டு இந்தியாவில் நடந்த ஓர் ஆய்வின்படி தமிழகத்தில், 2015 ஆம் ஆண்டில் 7,07,900 கருக்கலைப்புகள் நடந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதில் பாதுகாப்பான, பாதுகாப்பில்லாத மையங்களில் நடந்தவை மற்றும் மாத்திரைகள் மூலம் சுயமாக கருக்கலைப்பு செய்துகொண்டதும் இதில் அடங்கும். இதே ஆண்டு சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி, (HMIS), மாநிலத்தில் பதிவான கருக்கலைப்புகளின் எண்ணிக்கை இதில் 10 சதவிகிதத்தை விடக் குறைவு.

கருக்கலைப்பு செய்துகொண்ட பெண்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர் (49.1%) கிராமப் பகுதியை சார்ந்தவர்கள் மேலும் 97.8 சதவிகிதத்தினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாழ் மக்கள் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர் என இவ்வாய்வு தெரிவிக்கிறது. தமிழகத்தில் மொத்தம் 3,235 கருக்கலைப்பு சேவை மையங்கள் உள்ளது. அவற்றில் 86 சதவிகிதம் தனியார் மையங்கள் ஆகும். தமிழகத்தில் நடக்கும் கருக்கலைப்புகளில் மூன்றில் ஒன்று மட்டுமே மருத்துவ மையங்களில்


---

π காமன்ஹெல்த் என்பது பல்வேறு மாநிலங்களிலுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். இவ்வமைப்பு 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பாலியல் இனப்பெருக்க நல மேம்பாட்டிற்காக அதிலும் முக்கியமாக, மகப்பேறு நலன் மற்றும் பாதுகாப்பான கருக்கலைப்பு குறித்து இவ்வமைப்பு பணிசெய்து வருகிறது.

நடக்கிறது. மேலும் 63 சதவிகித கருக்கலைப்புகள் மாத்திரைகள் மூலம் மருத்துவ மையங்களுக்கு வெளியே நடப்பதாகவும் குட்மாக்கர் ஆய்வு தெரிவிக்கிறது.

பொதுவாக, பெண்களில் பாலியல் இனப்பெருக்க நலப் பிரச்சனைகளுக்காக பணிபுரியும் தொண்டு நிறுவனங்கள் தமிழகத்தில் அதிகம் இல்லை. அதிலும், பெரும்பாலானவை கருக்கலைப்பிற்கு எதிரான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. கருத்தரித்தவுடன் கருவிற்கு உயிர் வாழ உரிமை உள்ளது என்ற கருத்தும், பாலினத் தேர்வில் நடக்கும் கருக்கலைப்பிற்கு இது வழிவகுக்கும் என்ற கருத்தும் தன்னார்வக் குழுக்களிடையே நிலவி வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் வரைபடம்




## காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவரும் விவரங்கள்:-

1. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 73 அரசு மருத்துவ மையங்களும் 50 தனியார் மருத்துவமனைகளும் கருக்கலைப்பு சேவை வழங்குவதற்கு என அங்கீகாரம் பெற்றுள்ளன.
2. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆய்வுக் குழுவினர் பார்வையிட்ட 3 அரசு மருத்துவமனைகளில் ஒன்றில் மட்டுமே 12 லிருந்து 20 வாரங்கள் வரையிலான கருவைக் கலைக்கும் சேவை வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்ற மருத்துவர்கள், தேவையான உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சை அரங்குகள் போன்ற வசதிகள் மற்ற இரண்டு மருத்துவமனைகளில் இருந்த போதிலும் 3 மாதத்திற்கு மேற்பட்ட கருவைக்கலைப்பதற்கான சேவை அங்கு வழங்கப்படுவதில்லை.
3. கருக்கலைப்பிற்கு கணவரின் ஒப்புதல் பெறவேண்டும் மற்றும் கருத்தடை முறைகளை அவசியம் பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன்தான் அரசு மருத்துவமனைகளில் கருக்கலைப்பு சேவை வழங்கப்படுகின்றன.
4. திருமணமாகாத பெண்கள், எச் ஐ வி யால் பாதிக்கப்பட்டோர் போன்றவர்கள் அரசு அமைப்பை கருக்கலைப்பு சேவைக்காக நாடும்போது, பல நேரங்களில் சேவைகள் மறுக்கப்படுகிறது. மேலும், சேவையைப் பெறுவதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட முறை செல்ல வேண்டியுள்ளது, அது போலவே, திட்டுதல் மற்றும் குற்றப்படுத்துதலுக்கும் ஆளாக நேரிடுகிறது என பல பெண்கள் தெரிவித்துள்ளனர்.
5. அரசு மருத்துவமனைகளுக்கு கருக்கலைப்பு சேவைக்காக பெண்கள் செல்லும்போது பல விதமான பிரச்சனைகளை சந்திக்கிறார்கள். அதனால் தனியார் அமைப்பையே பெரும்பாலும் தேர்வுசெய்கின்றனர். தனியார் மருத்துவமனைகளில் குறைந்தபட்சம் 1000 ரூபாய் செலவாகிறது. ஆரோக்கியப் பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் 40000 ரூபாய் வரை செலவிட நேரிடுகிறது. நலிவடைந்த வகுப்பைச்சேர்ந்த பெண்களால் இச்செலவை சமாளிக்க முடிவதில்லை. அதனால் அவர்கள் பயிற்சி பெறாத மருத்துவரிடம் செல்கின்றனர் அல்லது சுயமாகவே கருக்கலைப்பு மாத்திரைகளை எடுத்துக் கொள்கின்றனர்.
6. முதல் மூன்று மாதத்திற்குள் நிகழும் கருக்கலைப்புகளில் பெரும்பாலானவை மாத்திரைகள் மூலம்தான் நடக்கிறது. இதில் சிலர், மருத்துவரின் பரிந்துரையின் படியும், பலர் மருந்து கடைக்கு சென்று சுயமாக மாத்திரைகள் வாங்கியும் உட்கொள்கின்றனர்.
7. ஏழு வாரங்களுக்கும் மேலான கருவை கலைப்பதற்கு மருத்துவர்கள் எளிய வழிமுறையான கருவை உறிஞ்சி எடுக்கும் முறையை பயன்படுத்தலாம். ஆனால் கருப்பை வாய் பகுதியை விரிவடைய செய்து கருவை சுரண்டி எடுக்கும் (D&C) முறையையே பலரும் பயன்படுத்துவதாக பல பெண்கள் தெரிவித்துள்ளனர்.
8. கருக்கலைப்பு என்பது சட்டப்படி தவறு என இவ்வாய்வில் கலந்துகொண்ட பெரும்பாலான பெண்கள் கருதுகின்றனர். அதே நேரம் கருவின் வளர்ச்சியில் குறைபாடு, பலாத்காரத்தின் விளைவாக ஒரு பெண் கருவுற்றிருந்தால் அல்லது ஒரு பெண்ணின் ஆரோக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் கருவைக் கலைத்து விடுவது சரியானதே என்று கூறுகின்றனர்.
9. திருமணமாகாத பெண்கள் கருக்கலைப்பு செய்துகொள்வது பற்றி சரி-தவறு என்ற இரண்டு விதமான கருத்துக்கள் பெண்கள் மத்தியில் நிலவுகிறது.
10. கருக்கலைப்பை இடைவெளிக்கான ஒரு முறையாகவோ அல்லது குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முறையாகவோ கருதக் கூடாது என குழு

விவாதத்தில்கலந்து கொண்ட பெண்களில் பலரும் தெரிவித்தனர். ஆனால் கிராமப்புற பெண் தலைவிகள் மற்றும் பாரம்பரியமாக பிரசவம் பார்ப்பவர்கள் ஆகியோர் கருக்கலைப்பை குழந்தைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும் அல்லது இடைவெளிக்காகவும் செய்து கொள்ளலாம். இதில் தவறேதுமில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

11. பாலினத் தேர்வின் அடிப்படையில் நிகழும் கருக்கலைப்புகளை அவசியம் தடை செய்ய வேண்டும் அதேநேரம் பாதுகாப்பான கருக்கலைப்பு சேவை பரவலாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என தன்னார்வ அமைப்பில் பணி செய்வோர் கூறியுள்ளனர்.
12. திருமணமாகாத பெண்கள் மத்தியில் நடக்கும் தற்கொலைகளைத் தடுப்பதற்கு கருக்கலைப்பு சேவைகள் மிகவும் அவசியம் என பலரும் கருதுகின்றனர்.
13. திருமணமான பெண்களுக்கு கருக்கலைப்பு சேவை வழங்குவது குறித்து சேவை வழங்குபவர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகிறது.
14. கருத்தடை முறைகளின் தோல்வியால் அல்லது ஒரு திட்டமிடாத கர்ப்பம் நிகழ்ந்து அதை கலைக்க ஒரு பெண் முற்படும் போது, அப்பெண்ணிற்கு அச்சேவையை வழங்க அரசு மருத்துவர்கள் மறுக்கின்றனர். அது போலவே திருமண உறவில் நடக்கும் பலாத்காரத்தினால் ஒரு பெண் கருவுற்று அதை கலைக்க விரும்பும் சூழ்நிலையில் அப்பெண் கர்ப்பத்தை தொடருவதுதான் சரி என்ற கண்ணோட்டம் மருத்துவர்கள் மத்தியில் நிலவுகிறது.

## ஆய்விலிருந்து வெளிவரும் முக்கிய பிரச்சனைகள் :-

கருக்கலைப்பு சேவையைப் பெற பெண்கள் அரசு மருத்துவமனையை நாடும் போது பலவிதமான பிரச்சனைகளை சந்திக்கின்றனர். பலருக்கு சேவைகள் மறுக்கப்படுகிறது. சில நேரங்களில் சேவையைப் பெற பல நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது மற்றும் ஒன்றிற்கு மேற்பட்ட முறை செல்ல வேண்டியிருக்கிறது. இது கிராமப்புற பெண்களுக்கு மிகுந்த தடையாக உள்ளது. மேலும், சேவை வழங்குபவர்கள் பெண்களை திட்டுவதும், குற்றப்படுத்தி பேசுவதும் பரவலாகப் காணப்படுகிறது. அது போலவே கருக்கலைப்பு குறித்து மருத்துவர்கள் எதிர்மறையான கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பதும் முக்கிய பிரச்சனையாக உள்ளது. மேலும் கருக்கலைப்பு மாத்திரைகள் அரசு ஆரம்ப சுகாதார மையங்களில் கிடைக்காததால், மக்கள் தனியார் மருத்துவமனைக்கு சென்று அதிக பணம் செலவிட நேரிடுகிறது. தமிழகத்திலுள்ள கிராமப் புற பெண்கள் மத்தியில் கருக்கலைப்பு சட்டம் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாததும், அச்சேவையை பெறுவதில் ஒரு பெரிய தடையாக உள்ளது.

இவ்வாய்வு முடிவின் அடிப்படையில் இரண்டு முக்கிய பிரச்சனைகளை நாம் மேற்கொள்வது அவசியமாகிறது ஒன்று, கருக்கலைப்பு சேவை தேவைப்படும் பெண்களுக்கு பாதுகாப்பான சேவைகள் இலவசமாக கிடைக்க வேண்டும். இரண்டாவதாக, கருக்கலைப்பு என்பது ஒரு பெண்ணின் இனப்பெருக்க உரிமை மற்றும் பெண்களின் நலனுக்கு அவசியமான ஒன்று என்கிற ரீதியில் அச்சேவை பரவலாக அனைவருக்கும் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

## நன்றி :-

இத்திட்டத்திற்கு நிதி மற்றும் வழிகாட்டுதல் வழங்கிய ஆசியன் பசிபிக் ரிசோர்ஸ் அண்டு ரிசர்ச் சென்டர் - ஆரோ என்ற அமைப்பிற்கும் நிர்வாக உதவி அளித்த சகாஜ் நிறுவனத்திற்கும் காமன்ஹெல்த் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**SAHAJ on behalf of CommonHealth**
SAHAJ, 1 Shri Hari Apartments, 13 Anandnagar Society,
Behind Express Hotel, Alkapuri, Vadodara, Gujarat, India 390007
Tel: 91-265-2342539 • Email: sahaj_sm2006@yahoo.co.in
Website: www.sahaj.org.in

Contact: Swati Shinde [Coordinator CommonHealth] • Email : cmnhsa@gmail.com
CommonHealth website: http://www.commonhealth.in